இஷ்டம்போல் எடுத்துச் செல்வதற்கும் மேலும் களவு போவதற்கும் வாய்ப்பாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கு, வாடகைக் கட்டிடங்களுக்கு வாடகைக் கொடுப்பதால், நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, தனியார் கட்டிடங்களில் வைத்து விற்கப்படாமல், அரசே தனது சொந்தக் கட்டிடங்களில் வைத்து விற்பதால், இஷ்டம்போல் எடுத்துச் செல்வது தவிர்க்கப்படுகிறது ; களவு போவதையும் தடுக்கலாம் ; ஒரு பாதுகாப்பாக இருக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, ஏழை எளியவர்களின் இதயத்தில் குடி கொண்டிருக்கும் நமது இதய தெய்வம் டாக்டர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய அரசில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் திட்டத்தில், நமது பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 10,921 கடைகள் இருக்கின்றன. இதிலே 4,214 கடைகள் இப்போது, கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மீதம் இருக்கிற 16,707 கடைகள் வாடகைக் கட்டிடங்கள் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடமாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட சிறு குறைகளைத் தடுக்க முடியும். ஆனால், இவைகளைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், 125 கோடி ரூபாய் நமக்குப் பணம் தேவை, அந்த அளவு நிதிவசதி இல்லாத காரணத்தினால், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கட்டிடங்களைக் கட்டலாம் என்று மாநில திட்டக் குழு பரிந்துரை செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 491, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 492, திரு. ஜெ. பாலகங்காதரன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

492—

<u>சிவகாசியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்தல்</u>

<u>**11120*—திரு. ஜெ. பாலகங்காதரன் :*</u> மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் மிளகாய் வற்றல் அதிகம் விளைவதால் சிவகாசியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுபோன்ற உத்தேசம் ஏதுமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சிவகாசியைச் சுற்றியுள்ள பகுதியில் மிளகாய் வற்றல் அதிக அளவு விளைச்சல் இருப்பதாலும், மேலும், உரவிலை மற்றும் கூலி விகிதம் ஆகியவை உயர்ந்துவிட்ட காரணத்தினால், மிளகாய் வற்றல் விலை மிகவும் சரிந்து விட்டது. ஆனால், அங்கே கமிஷன் கடைகளுக்கு மிளகாய் வற்றலை விற்பதற்குக் கொண்டு சென்று போட்டால், 100 ரூபாய்க்கு 5 ரூபாய் கமிஷன் என்று அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் எந்த முதலீடும் இல்லாமல் அவ்வாறு கமிஷன் பெறுவதால், குவிண்டால் ஒன்றுக்கு 120 ரூபாய்வரை இழப்பு ஏற்படுகிறது. எனவேதான், இங்கே சிவகாசியிலே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். தயவு செய்து, இந்த ஆண்டாவது அரசு அதை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல சிவகாசியைச் சுற்றியுள்ள பகுதிகளிலெல்லாம் மிளகாய் அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. எனவேதான், சிவகாசியைச் சுற்றியுள்ள 13 கிலோமீட்டர் தூரத்திலேயுள்ள வேப்பங்கோட்டையிலும், 19 கிலோமீட்டர் தூரத்திலுள்ள சாத்தூரிலும், 20 கிலோமீட்டர் தூரத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரிலும் மற்றும் 22 கிலோமீட்டர் தூரத்திலுள்ள விருதுநகரிலும் இப்போது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடங்களில் எல்லாம் விற்பனைக் கூடங்கள் உள்ள அந்த பகுதிகளுக்கு அருகிலே எங்கேயும் மிளகாய் வற்றல் உற்பத்தி ஆகாமல், பருத்தி மட்டும்தான் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு விளைந்துள்ள அபரிமிதமான விளைச்சலை அரசே எடுத்துக் கொள்ள ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இராமநாதபுரம் விற்பனைக் குழுவில் போதிய நிதிவசதி இல்லை. எனவே, அந்த விற்பனைக் குழுவிற்குத் தேவையான நிதிவசதி பெருகியவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 493, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை. திரு. காஞ்சி பன்னீர்செல்வம் கேட்கிறார், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

493—

விவசாயிகளுக்கு தார்பாய் மானிய விலையில் வழங்கல்]

*15620—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு தார்பாய் மானிய விலையில் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒரு தானியசேமிப்புக் கலன்/தார்ப் பாய்க்கு 50 சதவிகிதம் மானியத்தில் அதிகபட்சமாக ரூ.1,000 வீதம் 20,000 எண்கள் உள்ள தார்ப்பாய்கள் மற்றும் தானிய சேமிப்புக் கலன் ரூ. 2 கோடி அளவில் வழங்குவதற்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இவ்வாண்டு வழிவகை செய்திருக்கிறார்கள்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தார்ப் பாயைத் தருகிறேன் என்று சொன்னதற்கு முதலிலே நன்றியைத் தெரிவித்து, வசதியுள்ள விவசாயிகள் அறுவடைக்குப் பின்னாலே நெல்லைத் தனிமைப்படுத்துவதற்கு கலன் அமைத்துக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS